# வலயக்கல்வி அலுவலகம்,
# மன்னார்.

## மேற்பார்வை

**திரு. க.ஜே. பிறெட்லி**
**வலயக்கல்வி பணிப்பாளர்,**
**வலயக்கல்வி அலுவலகம்,**
**மன்னார்.**

## வழிகாட்டலும், ஆலோசனையும்

**திருமதி. வாசுகி சுதாகர்**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி)**
**வலயக்கல்வி அலுவலகம்,**
**மன்னார்.**

## தயாரிப்பு

**திரு.சந்திரலிங்கம் றமேஸ்**
**ஆசிரிய ஆலோசகர்**
**வலயக்கல்வி அலுவலகம்,**
**மன்னார்.**

# 1.கடவுள்

1) கடவுளை நாம் எவ்வாறு உணர்கின்றோம்?
   - இந்த உலகத்தைப் படைத்து, காத்து அழிக்கும் சக்தி ஒன்று உள்ளது. அந்த சக்தியே கடவுள் என உணரப்படுகிறது.

2) கடவுள் என்பதன் பொருள் யாது?
   - கட + உள் = கடவுள் ஆகும். அதாவது எல்லாப் பொருட்களையும் கடந்தும், அவற்றின் உள்ளே கலந்தும் இருப்பது என்பதும் இதன் பொருளாகும்.

3) கடவுளின் இயல்புகள் எவை?
   - எங்கும் நிறைந்தவர்
   - எல்லாம் அறிந்தவர்
   - எல்லாம் வல்லவர்
   - அளவில்லா ஆனந்தமுடையவர்
   - கடவுள் உலகைப் படைப்பவர்

4) உலகில் உள்ள உயிரினங்கள் எல்லாம் கடவுளின் குழந்தைகளாகக் காரணம் யாது?
   - கடவுளே உலகையும் உலகில் உள்ள ஜீவராசிகளையும் படைப்பவர் என்பதனால் ஆகும்.

5) கடவுள் எம்மைப் படைத்தமையினால் எமக்கு என்ன செய்கின்றார்?
   - கடவுள் நாம் செய்யும் பாவங்களை நீக்கியும், பாவங்களைச் செய்யாமல்த் தடுத்தும், எங்களை நல்வழியில் நிற்கச் செய்திருக்கிறார்.

6) கடவுளின் உண்மைத்தன்மை பற்றி அறியும் நூல்கள் எவை?
   - வேதங்கள்
   - உபதிடதங்கள்
   - ஆகமங்கள்

7) கடவுளின் உண்மைத் தன்மை பற்றிக் கூறும் உபநிடதங்கள் எவை?
   - சாந்தோக்கிய உபதிடதம்

8) கடவுளின் உண்மைத் தன்மை பற்றி ஆராய்ந்த தந்தை, மகன் யாவர்?
   - தந்தை - உத்தாலகர்
   - மகன் - சுவேதகேது

9) கடவுளின் பரந்த தன்மையினை உத்தாலகர் மகனுக்கு எவ்வாறு விளக்கினார்?
   நீரில் உப்புக்கல் கரைந்து பரந்திருப்பதைப் போல், கடவுளும் எங்கும் பரந்திருக்கிறார் என்று உத்தாலகர் மகனுக்கு விளக்கினார்.

10) உத்தாலகர் இவ்வுலகம் கடவுளால் தோன்றியது என்பதை சுவேதகேதுவிற்கு எவ்வாறு உணர்த்தினார்?
   - ஆலம் பழம் ஒன்றை மகனிடம் கொடுத்து, அதன் விதையை மேலும் பிரிக்கச் செய்து எதுவும் தென்படாத நிலையில், கண்ணுக்குப் புலப்படாத மிகவும் சிறிய ஆலம் விதையில் இருந்து பெரிய ஆலமரம் உண்டாகுகின்றது. அது போலவே கண்ணுக்குப் புலப்படாத கடவுளிடம் இருந்து இந்த உலகம் தோன்றியது என்பதை விளக்கிக் கூறினார்.

11) உலகப் படைப்புக்கு இறைவனே காரணன் என்பதை எளிய உதாரணங்கள் மூலம் விளக்கியவர் யார்?

- உத்தாலகர்

12) இறைவனின் ஐந்தொழில்களும் எவை?

- படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல்

13) ஐந்தொழில்களுக்கு வழங்கப்படும் மறு பெயர் யாது?

- பஞ்ச கிருத்தியங்கள்

14) இறைவன் ஐந்தொழில்களை ஆற்றுவதற்கான நோக்கம் யாது?

- உயிர்களுக்கு அருள் புரிதல்

## அலகுப் பயிற்சி - 01

1) கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதை எவ்வாறு அறியலாம்?

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

2) கடவுளின் இயல்புகள் 3 தருக?

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

3) கடவுளின் உண்மைத் தன்மை பற்றிக் கூறும் நூல்கள் எவை?

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

4) கடவுள் எங்கும் பரந்துள்ளார் என்பதை உத்தாலகர் எவ்வாறு விளக்கினார்?

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

5) கடவுள் உலகைப் படைத்தார் என்பதை உத்தாலகர் எவ்வாறு விளக்கினார்?

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

.....................................................................................................................................................

# 2.ஆலய வழிபாடு

1) ஆலயம் என்றால் என்ன?
ஆலயம் என்பது இறைவன் வீற்றிருந்து ஆன்மாக்களுக்கு அருள் புரியும் இடம், அதாவது மக்கள் மன ஒருமைப்பாட்டோடு கடவுளை வழிபடுவதற்குரிய இடம் ஆலயமாகும்.

2) ஆலயம் என்பதன் பொருள் யாது?
ஆலயம் என்பது ஆ+லயம் என்று பிரிந்து ‘‘ஆ’’ என்பது ஆன்மாவையும், ‘‘லயம்’’ என்பது ஒன்றித்தலையும் குறிக்கிறது. அதாவது ‘‘ஆன்மா ஒன்றிக்கும் இடம்’’ என்பதாகும்.

3) ‘‘பசு’’ என்பது யாது?
ஆன்மா

4) மும்மலங்களும் எவை?
ஆணவம் கன்மம் மாயை

5) ஆலயம் எமக்கு எவ்வாறு உதவுகிறது?
ஆன்மாக்களின் மும்மலங்களையும் நீக்கி இறைவனிடத்தில் ஒடுக்குவதற்கு உரிய இடமாக ஆலயம் அமைகிறது.

6) உலகமெங்கும் பரந்துள்ள இறைவனின் அருள் கிடைக்கப் பெறும் இடம் எது?

ஆலயம்

7) ‘‘கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்’’ எனக் கூறியவர் யார்?

ஔவையார்

8) ஆலயம் எவ்வமைப்பில் காணப்படுகிறது?

மனித உடலின் அமைப்பு(ஒரு மனிதன் படுத்திருக்கும் தோற்றத்தில் அமைந்துள்ளது)

9) மனித உடலின் அமைப்பில் ஆலய தத்துவம் யாது?

- சிரசு - மூலஸ்தானம்
- கழுத்து – அர்த்தமண்டபம்
- மார்பு – மகாமண்டபம்
- வயிறு – நிருத்தமண்டபம்
- கால்கள் - முன்மண்டபம்
- பாதங்கள் - இராஜகோபுரம்

10) கோபுரம் எதனை விளக்குகின்றது?
- பிரபஞ்ச இயக்கத்தை விளக்குகின்றது.

11) கோபுரத் தளங்கள் எதனைக் குறிக்கின்றது?
- உலக வாழ்வின் பலவித அனுபவ நிலைகளைக் குறிக்கின்றது.

12) கோபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பம்சங்கள் எதனைச் சுட்டுகின்றது?
- இறைவனின் திருவிளையாடல்களைச் சுட்டுகின்றது

13) தூலலிங்கம் என அழைக்கப்படுவது எது?
- கோபுரம்

14) கோபுரம் வேறு எவ்வாறு விளங்குகின்றது?

- சூக்குமலிங்கம் என்றும், மூல மூர்த்தியின் வெளிப்படையான குறியீடாக விளங்குகின்றது. எம் மனதில் இறையுணர்வை மேலோங்கச் செய்வதாக விளங்குகின்றது.

15) ஆலயத்தின் சுற்றுப் பிரகாரங்களில் காணப்படும் பரிவாரத் தெய்வங்கள் எவை?

- விநாயகர், சுப்பிரமணியர், தட்சணாமூர்த்தி, வைரவர், சண்டேசுவர், துர்க்கை, இலக்குமி முதலிய தெய்வங்களினதும், நவக்கிரகங்களின் சந்நிதானங்களும் அமைந்துள்ளது.

16) ஆலயத்திற்குள் எவ்வாறு செல்ல வேண்டும்?

- நீராடி, தோய்த்துலர்ந்த ஆடை அணிந்து செல்ல வேண்டும்.

17) ஆலயத்திற்குச் செல்லும் போது எவற்றைக் கொண்டு செல்ல வேண்டும்?

- பூ, தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, பால், தயிர், நெய், தேன் முதலான பூசைத்திரவியங்களைக் கொண்டு செல்ல வேண்டும்.

18) ஆலயத்திற்குச் சென்றதும் நாம் செய்யும் வழிபாட்டு முறைகள் எவை?

- ஆலயத்திற்குச் சென்றதும் முதலில் கால் கழுவி, கோபுரதம்மை வழிபட்டு, இறை சிந்தையோடு உட்செல்ல வேண்டும். பின் பலிப்பீடத்தையும், திருநந்திதேவரையும் வணங்கிய பின் மூலமூர்த்தியை வணங்க வேண்டும்.

19) ஆன்மாவானது இறைவனை அடைய என்ன செய்ய வேண்டும்?

- எப்போதும் இறைசிந்தனையுடன் இருக்க வேண்டும்.

20) நந்தி தேவர் மூலவரை நோக்கி இருப்பதற்குரிய காரணம் யாது?

- ஆன்மாவானது இறைவனை அடைவதற்கு எப்போதும் இறை சிந்தனையுடன் என்பதைக் குறிக்கும் வகையிலேயே நந்தி தேவர் மூலவரை நோக்கியவாறு அமர்ந்துள்ளார்.

21) விநாயகரை எவ்வாறு வணங்குதல் வேண்டும்?

- விநாயகரை வணங்கும் போது, முஷ்டியாகப் பிடித்து கைகளால் சிரசில் 3 முறை குட்டிக் கும்பிடல் வேண்டும். பின்னர் இடக்கையால் வலக்காதையும், வலக்கையால் இடக்காதையும் பிடித்து 23 முறை தாழ்ந்தெழுந்து (தோப்புக்கரணம்) போட்டு வணங்குதல் வேண்டும்.

22) நமஸ்காரம் செய்யும் போது எத்திசைகள் நோக்கி கால்களை நீட்ட வேண்டும்?

- மேற்கு, தெற்கு

23) நமஸ்காரங்களை எத்தனை முறை செய்தல் வேண்டும்?

- மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது என்ற எண்ணிக்கைகள்

24) நமஸ்காரம் எத்தனை வகை? அவை எவை?

- இரண்டு வகை
- அட்டாங்க நமஸ்காரம் - (ஆண்கள்)
- பஞ்சாங்க நமஸ்காரம் - (பெண்கள்)

25) நமஸ்காரம் செய்து எழுந்ததும் யாது செய்தல் வேண்டும்?

- இரு கரங்களையும் இதயத்திலே குவித்து, இறைவனை மனதில் நினைத்து, மெதுவாக ஆலயத்தை வலப்பக்கமாக சுற்றி வணங்குதல் வேண்டும்.

26) இறுதியாக வழிபடும் மூர்த்தி யார்?

- சண்டேசுரர்

27) மூர்த்திகளை வழிபட்ட பின் நாம் செய்ய வேண்டியவை யாவை?

- வடக்கு நோக்கி இருந்து, கடவுளைத் தியானித்துக் கொண்டு திருமுறைகளைப் பாராயணம் செய்தல் வேண்டும்.

28) தினமும் ஆலயத்திற்குச் செல்லாதவர்கள் வேறு எப்போது செல்லுதல் வேண்டும்?

- வசேட தினங்களில் செல்லுதல் வேண்டும்

29) ஆலயத்தில் செய்யத்தகாதது எவை?

- ஆசாரமில்லாது செல்லக் கூடாது
- கால் கழுவாது உடசெல்லக் கூடாது
- ஆலயச் சூழலில் எச்சில் உமிழ்தல்
- மலசலங்கழித்தல்
- தலைமுடி கோதுதல்
- வெற்றிலை பாக்கு உண்ணுதல் என்பன செய்யக் கூடாது.

30) ஆலயத்தில் குற்றமுடைய செயல்களாக கருதப்படுபவை எவை?

- ஆலயத்தினுள் வீண் வார்த்தை பேசுதல்
- விக்கிரகங்களைத் தீண்டுதல்
- பலிபீடத்திற்கு குறுக்கே செல்லுதல்
- ஓடி வலம் வருதல்
- திரைச்சேலை இட்டிருக்கும் போது நமஸ்கரித்தல்

## அலகுப்பயிற்சி-02

01) இறைவனை ஏன் ஆலயத்திற்குச் சென்று வழிபட வேண்டும்?

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

02) "தூலலிங்கம்" எனப்படுவது எது?

.......................................................................................................................................

.......................................................................................................................................

03) விநாயகரை எவ்வாறு வணங்குதல் வேண்டும்?

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

.......................................................................................................................................

04)ஆண்கள், பெண்கள் செய்யும் நமஸ்காரம் யாது? அது செய்யப்படும் முறை யாது?

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

05)ஆலயத்தில் செய்யத்தகாத செயல்கள் சில தருக?

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

# ஆ. ஆலயக்கிரியைகள்

01) வழிபாடுகள் எத்தனை வகைப்படும்? அவை எவை?
1. ஆன்மார்தம் 2. பரார்த்தம்

02) ஆன்மார்த்தம் என்றால் என்ன?
- ஆன்மார்த்தம் என்பது ஒவ்வொரு மனிதனும் தன் நலன் கருதி தன் இல்லத்தில் செய்யும் வழிபாடு.

03) பரார்த்தம் என்றால் என்ன?
- உலக நன்மையின் பொருட்டு திருக்கோவில்களில் செய்யப்படும் வழிபாடு.

04) ஆலயத்தில் நிகழும் பரமார்த்த கிரிகைகள் எவை?
- நித்திய கிரியை
- நைமித்திய கிரியை
- காமிய கிரியை

05) கிரியைகளில் இடம் பெறுகின்றவை யாவை?
அபிஷேகம்,அலங்காரம்,அர்ச்சனை,தீபாராதனை

07) கிரியை பற்றிய விளக்கங்களைக் கூறுவது எது?

08) நித்திய கிரியை என்றால் என்ன?
ஆலயத்தில் தினந்தோறும் இடம்பெறும் கிரியைகள் நித்திய கிரியை எனப்படும்.

09) ஆறுகாலப் பூசைகளும் எவை?
உஷத்காலம், காலைச்சந்தி, உச்சிக்காலம், சாயரட்டை, இரண்டாம் காலம், அர்த்தசாமம்

10) ஆறுகாலப் பூசைகளை வேறு எவ்வாறு அழைக்கலாம்?
ஷட்காலப் பூசைகள்

11) வசதி குறைந்த ஆலயங்களில் எத்தனை காலப் பூசை இடம் பெறுகின்றது?
இரண்டு அல்லது மூன்று வேளை இடம்பெறுகின்றது.

12) நைமித்திய பூசை என்றால் என்ன?
விடே காரணத்தின் பொருட்டு நிகழ்த்தப்படுபவை நைமித்திய பூசை எனப்படும்.

13) "**நைமித்திகம்**" என்ற சொல் எவ்வாறு தோன்றியது?
நிமித்தம் என்ற சொல்லை அடியாகக் கொண்டு தோன்றியது. நிமித்தம் என்பது காரணம் என்பதாகும்.

14) நைமித்திக கிரியை ஆலயங்களில் எப்போது நடைபெறுகின்றது?
வாரத்திற்கு ஒரு முறை, இரு வாரத்திற்கு ஒரு முறை, மாதம் ஒரு முறை, சில மாதங்களுக்கு ஒரு முறை, வருடம் ஒரு முறை பல வருடத்திற்கு ஒரு முறை என நடைபெறுகின்றது.

15) நைமித்திய கிரியைகள் எதனை அடிப்படையாகக் கொண்டு நடைபெறுகின்றன?
நட்சத்திரம், திதி

16) நைமித்திய கிரியைகளுக்கு சில உதாரணம் தருக?
மாசி மகம்
பிரதோச விரதம்

17) பிரதோச விரதம் எப்போது வருகின்றது?
இரு வாரத்திற்கு ஒரு முறை வரலாம், ஆனால் வளர் பிறையிலும் தேய் பிறையிலும் வரும் திரயோதசி திதியே கருத்திற் கொள்ளப்படும்.

18) வாரத்திற்கு ஒரு முறை நடைபெறும் நைமித்திய கிரியை யாது?
சுக்கிரவாரம், சோம வாரம்

19) இரு வாரத்திற்கு ஒரு முறை நடைபெறும் நைமித்திய கிரியை யாது?
கார்த்திகை, சதுர்த்தி, சஷ்டி, மாதப்பிறப்பு, அமாவாசை, பௌர்ணமி

20) வருடம் ஒரு முறை நடைபெறும் நைமித்திய கிரியை யாது?
மாசிமகம், சிவராத்திரி, ஆடிப்பூசம், கார்த்திகைத் தீபம், மார்கழித் திருவாதிரை, ஆலயத்தின் பிரமோற்சவம்

21) பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் நைமித்திய கிரியை யாது?
மகாமகம், கும்பாவிஷேகம்

22) காமிய கிரியை என்றால் என்ன?
குறிப்பிட்ட நற்பலன் ஒன்றை விரும்பிச் செய்யப்பெறுவது காமிய கிரியை எனப்படும். அதாவது குறிக்கோள் ஒன்றினை மனதிற் கொண்டு அது நிறைவேற வேண்டுமென செய்யப்படும் கிரியை ஆகும்.

23) **"காமியம்"** எதனை அடியாகக் கொண்டு பிறந்தது?
"காமம்" என்ற சொல்லை, காமம் - விருப்பம்

24) நிஷ்காமிய கிரியை என்றால் என்ன?
பிரதிபலனை எதிர்பார்க்காமல் செய்யும் கிரியை

25) கிரியைகளை எவ்வாறு ஆற்ற வேண்டும்?
கிரியைகளை முறையாகப் பக்தி சிரத்தையுடன் கடவுளை நினைத்து செய்வதன் மூலம் உயர்ந்த நிலையை எய்தலாம்.

## அலகுப்பயிற்சி - 03

01) ஆலயத்தில் திகழ்த்தப்படும் கிரியைகள் எவை?
..........................................................................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

02) நித்திய கிரியை எனப்படுவது யாது?
..........................................................................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

03) ஆறுகால பூசைகளும் எவை?

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

04) நைமித்திய கிரியை என்றால் என்ன?

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

05) காமிய கிரியை எனப்படுவது யாது?

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

# 3.சிவராத்திரி

01) சிவராத்திரி என்றால் என்ன?
- சிவனுக்குரிய இராத்திரி என்பதால் சிவராத்திரி எனப்படும்.

02) சிவ விரதங்களில் விசேடமானது எது?
- சிவராத்திரி

03) சிவராத்திரி எத்தனை வகைப்படும் அவை எவை?
- 5 வகைப்படும்
- மகா சிவராத்திரி, மாத சிவராத்திரி, யோக சிவராத்திரி, பட்ச சிவராத்திரி, நித்திய சிவராத்திரி என்பனவாகும்.

04) மகா சிவராத்திரி எப்போது அனுஷ்டிக்கப்படுகின்றது?
- மாசி மாத தேய்பிறை சதுர்த்தசியில் அனுஷ்டிக்கப்படுகின்றது

05) சாதாரண இராத்திரி என்பது யாது?
- நாம் ஒவ்வொரு நாளும் காணும் இராத்திரி சாதாண இராத்திரி எனப்படும்

06) உண்மையான இருட்காலம் என்பது யாது?
- இறைவன் உலகம் முழுவதையும் ஒடுக்கி நிற்கும் காலம் ஆகும்.

07) இறைவன் உலகம் முழுவதையும் ஒடுக்கி நிற்கும் காலம் எவ்வாறு அழைக்கப்படும்?
- சர்வசங்கார காலம், பிரளயகாலம், ஊழிமுடிவு, பேரிருட் காலம்

08) பேரிருட்டுக் காலத்தில் தனித்து நிற்பவர் யார்?
- சிவபெருமான்

09) படைப்புக் கடவுள் யார்?

- பிரம்மன்

10) காத்தல் கடவுள் யார்?

- விஸ்ணு

11) தம்முள் யார் பெரியவர் என்று வாதிட்டவர்கள் யாவர்?

- பிரம்மாவும், விஸ்ணுவும்

12) பிரம்மாவும், விஸ்ணுவும் தம்முள் யார் பெரியவர் என்று முரண்பட்ட போது அவர்கள் முன் நிகழ்ந்தது என்ன?

சிவபெருமான் ஒளிப்பிளம்பாகத் தோன்றி "இந்த ஒளிப்பிளம்பின் அடியையாவது, முடியையாவது கண்டு வருபவரே பெரியவர்." என்று ஓர் அசரீரி ஒலித்தது.

13) பிரம்மா முடியை எவ்வாறு தேடினார்?

அன்னப்பட்சி வடிவமெடுத்து முடியை நோக்கிப் பறந்தார்.

14) விஸ்ணு அடியை எவ்வாறு தேடினார்?

பன்றி வடிவம் எடுத்து மண்ணைக் குடைந்து அடியைத் தேடினார்.

15) பிரம்மாவினதும் விஸ்ணுவினதும் முயற்சி எவ்வாறு அமைந்தது?

தோல்வியில் முடிந்தது.

16) தோல்வியில் இருந்து இருவரும் எதனை உணர்ந்தனர்?

தமது இயலாமையையும் சிவபெருமானே பரம்பொருள் என்பதனையும் உணர்ந்தனர்.

17) அடி,முடி தேடிய வரலாறு உணர்த்தும் தத்துவம் என்ன?

ஆணவம் கொண்டவர்களால் இறைவனை அறிய முடியாது.என்ற பேருண்மை . வெளிப்படுத்தப்படுகிறது

18) சோதிப்பிழம்பாகத் தோன்றிய வடிவம் எது?

இலிங்கோற்பவ மூர்த்தி

19) இலிங்கோற்பவ மூர்த்தி தோன்றிய காலம் எது?

சிவராத்திரி தினத்தில் இரவு 11.30 முதல் 12.15 வரை இலிங்கோற்பவர் காலம் எனப்படுகிறது.

20) இலிங்கோற்பவர் காலத்தில் நாம் மேற்கொள்ள வேண்டியது யாது?

நித்திரை கொள்ளாது பக்தி பூர்வமாக வழிபடுவதற்குரிய புண்ணிய காலமாகக் கொள்ளப்படுகிறது. மேலும் இலிங்கோற்பவ மூர்த்திக்கு அபிஷேகமும்,வில்வம்அர்ச்சனையும் செய்வது மேலான பலனைத் தரும்.

21) சிவராத்திரி தினத்தில் சிவனை வழிபட்டு பெரும் பேறு பெற்றவர்கள் யாவர்?

- இந்திரன்
- குபேரன்
- இராஜசேகர பாண்டியன்

22) மகா சிவராத்திரியின் முன் தினம் யாது?

- திரயோதசி

23) சிவராத்திரி விரதம் எவ்வாறு அனுஸ்டிக்க வேண்டும்?
மஹா சிவராத்திரி தினத்தின் முன் தினமான திரயோதசியில் ஒருவேளை பகல் உணவருந்தி, மறுநாள் முழுவதும் உபவாசம் இருந்து சிவராத்திரியின் மறு தினம் பாரணையில் உணவு உண்ண வேண்டும்.

24) சிவராத்திரி விரதத்தின் முக்கியமான விதி யாது?
சிவராத்திரி தினத்தில் இரவு முழுவதும் நித்திரை கொள்ளாது விழித்திருந்து, சிவாலயத்தில் இடம் பெறும் நான்கு ஜாமப் பூசைகளின் போதும், இலிங்க தரிசனம் செய்வது முக்கியமான விதியாகும்.

25) சிவராத்திரி விரதம் இருக்க இயலாதோர் யாவர்?
பாலர், வருத்தர் (முதியோர்), நோயாளர்

26) சிவராத்திரி தினத்தில் விரதம் இருக்க இயலாதோர் என்ன செய்ய வேண்டும்?
லிங்கோற்பவக் காலம் மட்டும் விழித்திருத்தல் சிறந்ததாகும்.

27) சிவாலயங்களில் இலிங்கோற்பவர் எங்கே காணப்படுவார்?
கருவறையின் மேற்குப் புறத்தில் காணப்படுவார்

28) சிவராத்திரி விரத மரபுகள், பலன்கள் பற்றிக் கூறும் புராணங்கள் எவை?
கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், இலிங்க புராணம், சிவமகா புராணம், சிவராத்திரி புராணம்.

29) சிவராத்திரி விரதம் அனுஷ்டிப்பதனால் ஏற்படும் நன்மைகள் எவை?
- பிறவியில் செய்த பாவங்கள் நீங்கும்
- உலகில் நன்மை பெருகும்

30) இறைவனின் அன்பையும், அருளையும் எவ்வாறு பெற முடியும்?
உண்மை, அன்பு, நேர்மை, முதலான நற்பண்புகளை வளர்த்துக் கொள்ளும் போது.

## அலகுப் பயிற்சி - 04

01) சிவராத்திரி எத்தனை வகைப்படும் அவை எவை?
....................................................................................................................................
....................................................................................................................................
....................................................................................................................................
....................................................................................................................................
....................................................................................................................................

02) சிவராத்திரி எப்போது அனுஷ்டிக்கப்படுகின்றது?
....................................................................................................................................
....................................................................................................................................
....................................................................................................................................

03) சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கும் முறையைக் கூறுக?
....................................................................................................................................
....................................................................................................................................
....................................................................................................................................
....................................................................................................................................
....................................................................................................................................

04) சிவராத்திரி விரதம் நோற்று பயன் பெற்றவர்கள் யாவர்?

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

05) சிவராத்திரி விரதம் பற்றிக் கூறும் புராணங்கள் எவை?

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

06) சிவராத்திரி பற்றிய புராணக்கதை கூறும் படிப்பினை யாது?

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

07) சிவராத்திரி விரதத்தை அனுஷ்ப்பதால் உண்டாகும் நன்மைகள் யாவை?

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

# 05. திருஞானசம்பந்தர் தேவாரம்

01) திருஞானசம்பந்த மூர்த்தி நாயநாரின் பக்திச் சிறப்பு யாது?

- 3 வயதில் ஞானப்பால் உண்டு தேவாரம் பாடியவர்
- சிவ பெருமானே எல்லா உயிர்க்கும் தஞ்சம் என்று உணர்ந்தவர்
- சிவனை வழிபட பல தலங்களுக்கும் யாத்திரையாகச் சென்றவர்
- பண்ணோடு தேவாரம் பாடி இறைவனைத் துதித்தவர்.

02) கோவில் என சிறப்பித்துக் கூறப்படுவது எது?

- சிதம்பரம்

03) “கற்றாங்கு எரியோம்பிக் ...” என்ற தேவாரத்தைப் பாடியவர், பண், தலம், சந்தர்ப்பம் என்பவற்றைத் தருக?

- **பாடியவர்** :- திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்
- **தலம்** :- சிதம்பரம்
- **பண்** :- குறிஞ்சி
- **சந்தர்ப்பம்** :- சம்பந்தர் சிதம்பரத்தை அடைந்து, ஆலயத்தினுள் சென்று திரு வீதி உலா வந்து, அங்கே அனவரதமும் ஆனந்தத் திருக்கூத்தாடும் அம்பலத்தரசனைக் கும்பிட்டு எழுந்து, மகிழ்ச்சி பொங்கப் பாடியமை

04) “**கற்றாங்கு எரியோம்பிக்** ...” என்ற தேவாரத்தை வரிக்கிரமமாக எழுதுக?

திருச்சிற்றம்பலம்

கற்றாங்கு எரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ் தில்லைச் சிற்றம்பலம் மேய
முற்றா வெண் திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே.

திருச்சிற்றம்பலம்

05) தில்லையிலே வாழ்கின்ற அந்தணர்கள் எதனைச் செய்கின்றனர்?

- வேதாகமங்களிற் கற்றபடி தீ வளர்த்து, வேள்விகளைச் செய்து, நாட்டிலே துன்பங்கள் வராதபடி காக்கின்றார்.

06) சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவன் நாமம் யாது?

- சிற்றம்பல நாதர்

07) சிற்றம்பல நாதரின் சிறப்புக்கள் எவை?

- இளம் பிறையைத் தனது சடமுடியில் தாங்கியபடி எழுந்தருளியிருப்பவர்.
- மூவுலகிற்கும் முதல்வர்
- எம்பெருமானின் தூக்கிய திருவடியைப் பற்றிக் கொண்டவர்களைப் பாவங்கள் பற்றி வருத்தாது.

08) மதுரையிலே பாண்டிய மன்னனைச் சமண சமயத்திலிருந்து மீட்டெடுத்து சைவனாக்கியவர் யார்?

- சம்பந்தர்

09) சம்பந்தர் பாண்டிய மன்னனுக்கு எதன் மகிமையை விளக்கினார்?

- திருநீற்றின் மகிமையை விளக்கினார்

10) சம்பந்தர் தந்தையாரைக் கண்டதும் யாரைச் சிந்தித்தார்?

- தோணியப்பரதும் பெரியநாயகியினதும் திருவடிகளைச் சிந்தித்தார்.

11) இறைவன், இறைவியை எவ்வாறு நினைத்து "மண்ணில் நல்ல வண்ணம்....." என்ற பதிகத்தைப் பாடினார்?

- "என்னை அறியாப் பருவத்தே ஆட்கொண்ட பெருந்தகை, எம் பெருமாட்டியுடன் இருந்ததே'' என்று நினைத்தார்.

12) "மண்ணில் நல்ல வண்ணம்......" என்ற பதிகத்தை பாடியவர், தலம், பண், சந்தர்ப்பம் என்பவற்றைத் தருக?

- பாடியவர் : சம்பந்தர்
- தலம் : திருக்கழுமலம்
- பண் : கொல்லி
- சந்தர்ப்பம் : சம்பந்தர் தனது தந்தையாரைக் கண்டதும் தோணியப்பரதும் பெரியநாயகியினதும் திருவடிகளைச் சிந்தித்து "என்ன அறியாப்பருவத்தே ஆட்கொண்ட பெருந்தகை எம் பெருமாட்டியுடன் இருந்தே" என நினைத்துப் பாடியமை.

13) **"மண்ணில் நல்ல வண்ணன்......"** என்ற பதிகத்தை விரிக்கிரமமாக எழுதுக?

திருச்சிற்றம்பலம்

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவிலை
கண்ணில் நல்ல.்.து உறும் கழுமல வளநகர்
பெண்ணில் நல்லாலொடும் பெருந்தகை இருந்ததே

திருச்சிற்றம்பலம்

14) திருக்கழுமலத்தின் சிறப்பு யாது?

- எங்கு பார்த்தாலும் கண்ணில் நல்ல காட்சியே படுகின்ற செழிப்பு மிக்க நகர் திருக்கழுமலம்.

15) திருக்கழுமலத்தில் வீற்றிருக்கும் இறைவன் இறைவியின் பெயர் யாது?

- இறைவன் : திருத்தோணியப்பர்
- இறைவியின் : உமாதேவியார்

16) சம்பந்தர், திருத்தோணியப்பரின் அருட்சிறப்பு யாது எனக் கூறுகின்றார்?

- திருத்தோணியப்பரை வணங்குகின்றவர்கள் இப் பூவுலகில் யாவரும் போற்ற வாழும் வாழ்வு உண்டாகும்.
- மறுமையிலும் நல்ல முத்திப்பேற்றுக்கு சிறிதளவேனும் குறைவு உண்டாகாது.

## அலகுப்பயிற்சி - 05

1) சிதம்பரத்தின் சிறப்பு யாது?

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

2) வேள்விகள் யாரால் எவ்வாறு செய்யப்படுகின்றது?

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

3) யாரைப் பாவங்கள் பற்றாது என்று சம்பந்தர் கூறுகிறார்?

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

4) மண்ணில் நல்ல வண்ணம் வாழ யாது செய்தல் வேண்டும் என கூறப்படுகிறது?

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

5) சம்பந்தர் திருத்தோணியப்பரின் அருட்சிறப்பு யாது? எனக் கூறுகிறார்?

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

# மாதிரி வினாத்தாள் - 01
## தவணை முன்னோடிப் பரீட்சை
## சைவநெறி

**தரம் :- 08** **நேரம் :- 02 மணி**

### பகுதி - I

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

- **பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

01) எல்லாப் பொருட்களையும் கடந்தும், அவற்றின் உள்ளே கலந்தும் இருப்பதினால் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
1. கடவுள் 2. இறைவன் 3. தலைவன் 4. ஆண்டவன்

02) கடவுளின் உண்மைத் தன்மை பற்றி கூறும் நூல்.
1. வேதம் 2. புராணம் 3. இதிகாசம் 4. கல்வெட்டு

03) கடவுளின் உண்மைத் தன்மை பற்றி கூறம் உபதிடதம்.
1. கேன உபதிடதம். 3. முண்டக உபதிடதம்
2. சாந்தோக்கிய உபதிடதம். 4. சுவேதாஸ்வர உபதிடதம்

04) உலகப் படைப்பிற்கு இறைவனே காரணமானவர் என்பதனை எளிய உதாரணங்கள் மூலம் விளக்கியவர்.
1. சுவேத கேது 2. வசிட்டர் 3. உத்தாலகர் 4. மித்திரர்

05) ஐந்தொழிலுக்கு வழங்கப்படும் மறு பெயர்?
1. பஞ்ச வேசம் 2. பஞ்ச முகம் 3. பங்ச சக்தி 4. பஞ்ச கிருத்தியம்

06) பசு என்பது யாது?
1. ஆன்மா 2. பாசம் 3. பக்தி 4. விலங்கு

07) “கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்” எனக் கூறியவர்?
1. திருமூலர் 2. கபிலர் 3. ஔவையார் 4. சுந்தரர்

08) மனித உடலின் வயிற்றுப் பகுதியாக அமைந்த ஆலயத்தின் பகுதி எது?
1. அர்த்த மண்டபம் 3. முன் மண்டபம்
2. மகா மண்டபம் 4. நிருத்த மண்டபம்

09) ‘‘தூலலிங்கம்’’ என அழைக்கப்படுவது.
1. கோபுரம் 2. கலசம் 3. சிவலிங்கம் 4. தூண்

10) நமஸ்காரம் செய்யும் போது எத்திசைகளை நோக்கி கால்களை நீட்ட வேண்டும்.
1. கிழக்கு, மேற்கு 3. மேற்கு, தெற்கு
2. வடக்கு, கிழக்கு 4. கிழக்கு, மேற்கு

11) ஆலயங்களிலே இருதியாக வழிபடப்படும் மூர்த்தி.
1. சண்டேசரர் 2. வைரவர் 3. நந்திதேவர் 4. லிங்கம்

12) கிரியை பற்றிய விளக்கங்களைக் கூறும் நூல் எது?
1. வேதம் 2. ஆகமம் 3. புராணம் 4. இதிகாசம்

13) ஆறுகால பூசைகளை வேறு எவ்வாறு அழைப்பர்?
1. அறு பூசை 2. ஷட்கால பூசை 3. சபண்டி பூசை 4. சப்த பூசை

14) சோதிப் பிழம்பாகத் தோன்றிய வடிவம் எது?
1. சிவ வடிவ மூர்த்தி 2. தட்சணாமூர்த்தி
2. இலிங்கோற்பவ மூர்த்தி 4. மகேசுவர மூர்த்தி

15) சிவராத்திரி தினத்தில் சிவனை நினைத்துப் பெரும் பேறு பெற்றவர்,
1. இராமன் 2. விஷ்ணு 3. குபேரன் 4. தருமர்

16) மகா சிவராத்திரியின் முன் தினம் யாது?
1. அபரபட்சம் 2. ஏகாதசி 3. மாசியம் 4. திரயோதசி

17) "கோயில்" என்று சிறப்பித்துக் கூறப்படும் ஆலயம்,
1. திருவாரூர் 2. திருப்பெருந்துறை 3. திருநாவலூர் 4. சிதம்பரம்

18) "கற்றாங்கு எரியோம்பி ........." என்ற தேவாரத்தைப் பாடியவர்?
1. சம்பந்தர் 2. அப்பர் 3. சுந்தரர் 4. மாணிக்கவாசகர்

19) சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவன் நாமம்
1. சிதம்பர தேசிகர் 3. நடராஜர்
2. சிற்றம்பல நாதர் 4. சிவராஜா

20) "மண்ணில் நல்ல வண்ணம்....." என்ற பதிகத்தின் பண்,
1. நட்டராகம் 2. காந்தாரம் 3. பஞ்சமம் 4. கொல்லி

(20x1=20 புள்ளிகள்)

## பகுதி II

## 1ம், 2ம் வினாக்கள் உட்பட 5 வினாக்களுக்கு விடை தருக.

01) பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக?

01. கடவுள் என்பதன் பொருள் யாது?

........................................................................................................................................

........................................................................................................................................

02. இறைவனின் ஐந்தொழில்களும் எவை?

........................................................................................................................................

........................................................................................................................................

03. ஆலயம் என்றால் என்ன?

........................................................................................................................................

........................................................................................................................................

04. மும்மலங்களும் எவை?

........................................................................................................................................

........................................................................................................................................

05. ஆலயத்திற்குக் கொண்டு செல்லும் பொருட்கள் 4 தருக?

........................................................................................................................................

........................................................................................................................................

06. நமஸ்காரம் எத்தனை வகைப்படும், அவை எவை?

........................................................................................................................................

........................................................................................................................................

07. ஆலயத்தில் நிகழும் பரமார்த்த கிரியைகள் எவை?

........................................................................................................................................

........................................................................................................................................

08. மகா சிவராத்திரி எப்போது அனுஷ்டிக்கப்படுகிறது?

..............................................................................................................................................

..............................................................................................................................................

09. இலிங்கோற்பவர் காலத்தில் நாம் மேற்கொள்ள வேண்டியது யாது?

..............................................................................................................................................

..............................................................................................................................................

10. தில்லையிலே வாழ்கின்ற அந்தணர்கள் எதனைச் செய்கின்றனர்?

..............................................................................................................................................

..............................................................................................................................................

(10x1=10 புள்ளிகள்)

02) பின்வரும் தேவாரத்தில் ஒன்றினை விரிக்கிரமமாக எழுதி, அதனைப் பாடியவர், பண், தலம், என்பவற்றைத் தருக?

01. "கற்றாங்கு எரியோம்பிக்................."

02. "மண்ணில் நல்ல வண்ணம்............."

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

03)

01. கடவுளை நாம் எவ்வாறு உணர்கின்றோம்?

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

02. கடவுளின் இயல்புகள் 3 தருக?

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

03. கடவுளின் பரந்த தன்மையினை உத்தாலகர் மகனுக்கு எவ்வாறு விளக்கினார்?

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

04)

01. ஆலயம் என்பதன் பொருள் யாது?

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

02. ஆலயத்தின் சுற்றுப்பிரகாரங்களில் காணப்படும் தெய்வங்கள் 3 தருக?

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

03. ஆலயத்திற்குச் சென்றதும் நாம் செய்யும் வழிபாட்டு முறைகள் எவை?

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

05)

01. வழிபாடுகள் எத்தனை வகைப்படும் அவை எவை?

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

02. நைமித்திய கிரியை ஆலயங்களில் எப்போது நடைபெறுகின்றன?

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

03. வருடம் ஒரு முறை நடைபெறும் நைமித்திய கிரயை 4 தருக?

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

06)

01. சிவராத்திரி என்றால் என்ன?

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

02. அடி, முடி தேடிய வரலாறு உணர்த்தும் தத்துவம் என்ன?

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

03. சிவராத்திரி விரதம் எவ்வாறு அனுஷ்டிக்க வேண்டும்?

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

07) பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக?

01. கடவுள்
02. ஆலயக் கிரியைகள்
03. சிவராத்திரி விரதம்
04. திருஞானசம்பந்தர்

1. ..............................................................................................................................................

2. ..............................................................................................................................................